கடவுள்

( மு. நாகேந்திர பிரபு )
உளவியல் நிபுணர்

தேடி கண்டவர் யாருமே இல்லை!
தெளிவு வந்தால் எதுவுமே இல்லை!!
(அகநோக்கு ஆய்வு முறை)

எங்கெல்லாம் மனிதன் தாழ்த்தப்படுகிறானோ, குற்றவாளிகளாக்கப்படுகிறானோ அங்கெல்லாம் போலியான/பொய்யான மதமும்; அதற்கென கடவுளும் உருவாக்கப்பட முயற்சி நடக்கிறது என்பதையே உணர்த்துகிறது. அப்படிச் சொல்லும் மதம் எதுவாக இருந்தாலும் அவை மனிதனைத் தன்னுள்ளாக இழுப்பதற்கே முயற்சிக்கிறது. தன்னைத் துதிபாட, பிராத்தனை செய்ய, நினைத்துப்பார்க்க, மகிழ்விப்பதற்காக கடவுள் மனிதனைப் படைக்கவில்லை. கடவுளுக்கு இவையாவும் அவசியமில்லாதது. என்ன காரணங்களுக்காக இவையாவும் அவசியமாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? கால் கடுக்க நின்று தரிசிப்பதும்; காடு மலைகளை நடந்து கடப்பதும்; அங்கு, இங்கு, எங்கு என்று எல்லா திசைகளிலும் ஓடியும் காணும் யாவும் கடவுள் கிடையாது. “உன்னை வருத்திக்கொண்டால் என்னை வந்தடைவாய்” என்பவர் கடவுளாகவே இருக்க முடியாது. “இதிலெல்லாம் பற்றற்றிரு” என்று சொல்ல அதைப் படைத்ததன் நோக்கம் என்ன? சோதித்து மதிப்பெண் வழங்குவது தான் கடவுளின் வேலையா? கடவுள்/இயற்கை யாருடைய பாவ புண்ணியங்களையும் எடைபோட்டுப் பார்த்து அதற்கேற்ப தண்டிப்பதில்லை. படைத்தவன் படைப்புகளைத் தண்டிக்க முடியாது. தன்னால் படைக்கப்பட்டவைகளால் விளையும் பயன்களுக்கு அவை தான் பொறுப்பு.

ஒவ்வொருவரும் ஓடிச்சென்று கடவுளிடம் போய் முறையிட; கடவுளும் தன்னை வேண்டுவோர்க்கு மட்டும் உதவ; என்று மனிதன் எப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான சிந்தனையைக் கொண்டிருக்கிறான்.ddd ஒரு கடவுள் தன்னைத் துதிப்பவனுக்கு, வேண்டுபவனுக்கு, அர்ச்சிப்பவனுக்கு, பூஜிப்பவர்க்கு மட்டுமே நன்மை செய்வாரானால் அவர் எப்படிக் கடவுளாக இருக்க முடியும்? வாழ்க்கையை ஒரு தண்டனைக் கலமாக, பரிசோதனைக் கூடமாக இறைவன்/இயற்கை படைத்திருக்க வாய்ப்பே இல்லை. பிறப்பு என்பது பாவத்தின் பலனோ அல்லது தாய் தந்தையின் தவறில் விளைந்த விளைச்சலோ இல்லை. எந்த ஒரு மதம் மனிதனைப் பாவத்தின் பிறப்பாக, தவறு இழைத்தவனாக சொல்லுகிறதோ அது அவனது பாவத்திற்கு மன்னிப்பு வழங்கவும்/பரிகாரம் செய்யவும் முன்வர வேண்டும்; வராமல் போனால் அந்த மதத்திலிருந்து அவன் விலகிவிடுவான். புரிந்துகொள்ளுங்கள்; அதற்காக தான் இன்று அத்தனை மதங்களும் அதை சரியாக பின்பற்றிக்கொண்டு இருக்கின்றன. மதம் மனிதனைத் தனக்குள்ளாக இழுப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் தான் மனிதனைக் குற்றவாளிகளாகவும், முட்டாள்களாகவும் மாற்றி இருக்கிறது. மதம் மனிதனை அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் ஈர்க்கிறது/ தக்க வைக்கிறது.

இந்த உலகம் அன்பு மயமானது; இறைவன் அன்பு மயமானவர். அன்பு ஒன்று தான் இந்தப் பிரபஞ்ச உயிர்களின் நோக்கமாக இருக்க வேண்டும். இன்னொரு உயிரைக் காயப்படுத்தாமல் நிபந்தனையற்று அன்பு செலுத்த முடியுமென்றால் அதுதான் கடவுளின் மார்க்கம். உன்னுடைய கடவுள் உனக்கு அன்பை போதிக்கவில்லையென்றால் அவர் கடவுளாக இருக்க அறுகதையற்றவர். அவர் கொண்ட மதம் முட்டாள்களில் கூடாரம். இன்னொருவரைத் தண்டிக்க வேண்டியும்; தன்னை

இன்னொருவன் அழிக்க நினைப்பதாகவும் எண்ணிக்கொண்டு கடவுளின் முன்னால் நிற்பாயானால் அதை விட உன்னைப்பார்த்து அவருக்கு அவமானம் வேறு எதுவும் இல்லை. ஒரு குறுகிய மனப்பான்மையோடு தான் மனிதன் கடவுளை அணுகுகிறான். கடவுளை மனிதன் அவமானப்படுத்துகிறான். அவரின் உண்மை இயல்பை மாற்றி கொச்சைப்படுத்துகிறான். இவர்கள் தான் என் உறவுகள் என்றும்; இவர்கள் எல்லாம் என் எதிரிகள் என்றும் பிரித்துக்கொண்டு அவைகளோடு முட்டி மோதியே வாழ்க்கை முடிந்து போகிறது. இந்தப் பிரபஞ்சத்தில் தன் இடம் எது என்பதை மட்டும் உணர்ந்தால் போதும் மனிதன் நிர்மூலனாகிப்போவான்.

எவனிடமாவது போய் “எல்லாம் சரியாக நடக்கிறது. இந்தப் பிரபஞ்சம் சரியாக படைக்கப்பட்டிருக்கிறது/கட்டமைக்கப்பட்டிருக்கிறது” என்று சொல்லிப்பார். ஏற இறங்க பார்த்து “நீ என்ன லூசா?” என்று கேட்பான். அதுவே, “மனிதன் பாவத்தின் பிறப்பு; இதுவெல்லாம் தண்டனை; நமக்கு விதிக்கப்பட்ட சாபம்” என்று எதிர்மறையான கருத்துக்களைச் சொல்லிப்பார். “ஆமாம் ஆமாம்” என்று எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இங்கு நிறைய பேருக்கு இராகு காலம் என்றென்றைக்கு எப்பொழுது என்று தெரியும்; நல்ல நேரம் பற்றி கேளுங்கள்; தெரியாது. மனிதர்கள் பிரச்சனையை மையப்படுத்தி வாழ்கிறார்கள். இயக்கமே பிரச்சனை என்று ஏற்றி வைத்திருக்கும் எண்ணத்தில் தான் பிரச்சனை. இங்கு எல்லா மனிதர்களுடைய சுயசரிதைப் புத்தகத்திலும் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? நேற்று இரவு வரை உங்கள் நாட்குறிப்பிலும் என்ன எழுதப்பட்டது என்று புரட்டிப்பாருங்கள். தனக்கு இவ்வளவு பிரச்சனை என்று சொல்லிக்கொள்வதில் சமூக அங்கீகாரத்தையும் அனுதாபத்தையும் பெற முயல்கிறான், வீரனாக வெளிக்காட்டுகிறான், தாழ்வு மனப்பான்மைக்கு ஈடுசெய்கிறான்.

மனிதனுக்குக் கடவுள் யார் என்பதிலே கொஞ்சமும் தெளிவு இல்லை. எப்பொழுதும் தீய சக்திகளுக்கு எதிராக கடவுள் போராடிக்கொண்டே இருக்கிறார். புதிது புதிதாக அரக்கன் வருகிறான். “தூணிலும், துரும்பிலும் இருப்பவர்” என்று கூறும் கடவுள்களுக்கும் எதிரி எங்கிருந்து வந்தான்; எவன் தான் இவர்களைப் படைக்கிறான் என்றே தெரியவில்லை. சிலநேரம், முக்காலமும் உணர்ந்த கடவுளும் முன்யோசனை இல்லாமல் வரம் தந்துவிடுகிறார். ஒரு பக்கம் கடவுளும் இன்னொரு பக்கம் அசுர சக்திகளும் எதிரெதிரே நின்று தங்கள் ஆயுதங்களை விட்டு தாக்கிக்கொள்வதாக; கடவுளின் சக்தி ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறைந்து போக அந்தச் சமயத்தில் தலைவிரித்தாடும் பேய் பிசாசுகளைத், தீயசக்திகளை மீண்டும் இன்னொரு சமயம் விஸ்வரூபமெடுத்து அழிப்பதாகவெல்லாம் கற்பனைச் செய்கிறான். ஒருவனைக் கதாநாயகனாக காண்பிக்க அவனை சுற்றி ஓராயிரம் அயோக்கியர்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். கடவுளையும் மனிதன் சண்டைக்காரர்களாக மாற்றிவிட்டான். அதிரடியாக எதையாவது செய்ய வேண்டும்; அற்புதமாக எதையாவது செய்ய வேண்டும். கடவுள் என்றால் நடந்து சென்று கடந்து போக கூடாது; மறைந்து போக வேண்டும் அல்லது பறந்துபோக வேண்டும். இப்பொழுது இருக்கும் கடவுளுக்கு அந்த சக்தியெல்லாம் இருக்கிறதா என்று தெரியவில்லை. எங்கே வந்தால் மனிதன் மதிக்க மாட்டானோ என்ற பயம். பாவம் கடவுள் மனிதனிடம் மாட்டிக்கொண்டார்.

“இதோ இவர்தான் என்னுடைய ஏஜென்ட்; அவரிடம் சென்றால், அவர் உன்னை என்னிடம் கூட்டிவருவார்” என்று கடவுள் யாரையும் நியமிக்கவில்லை. கடவுள் ஒன்றும் விற்பனைப் பொருளல்ல தன்னை விற்பதற்குப் பிரதிநிதிகளைத் தேடிப்பிடித்து அனுப்பி வைக்க. இருக்கும் வரை தன்னுடைய பெயருக்கு முன்னும் பின்னும் எழுத்துக்களைச் சேர்த்தும், கோர்த்தும், சில நேரங்களில் பெயரையே மாற்றியும் ‘நானே கடவுள்’ என்று சொல்லிக்கொண்டு சுற்றி வருகிறான். அவனும் முடிவில் இறப்பதை பார்த்தும் புரிந்துகொள்ளாமல் விளக்கம் சொல்லி சுற்றித்திரியும் பைத்தியக்கார கூட்டம். அவன் பிறந்தான், உண்டான், வளர்ந்தான், மடிந்தான்; அதையே தான் நீயும் செய்துகொண்டிருக்கிறாய்; வித்தியாசம் என்ன? இதில் விதிவிலக்காக உங்களுக்குத் தெரிந்து எவனாவது இருந்தால் சொல்லுங்கள். நானும் வந்து அவன் காலில் விழுந்து கிடக்கிறேன். <u>இந்தப் பிரபஞ்சத்தின் நிகழ்வுகளையும், இயக்கங்களையும் அதன்படியே அப்படியே ஏற்றுக்கொள்பவன் தான் ஆன்மீகவாதி. அதைக் குறைகூறி இன்னொருவரைத் தன் காலில் விழுந்துகிடக்க முயற்சிப்பவன்;</u>

தொடர்புக்கும் அறுகதையற்றவன். ஒவ்வொரு மனிதனும் பூரணத்துவம் பெறத் தகுதியானவர்களே. யாரும் கடவுளின் சாராம்சமே. யார் முன்னாலும் போய் நின்று; எவன் காலிலும் விழுந்து; உங்களுக்குள்ளாக இருக்கும் தெய்வீகத்தைக் கொச்சைப்படுத்தாதீர்கள்.

'எனக்கு உலகப் பொருட்களின் மீது பற்றில்லை; அவை அவசியமில்லை; அதனால், எடுத்துச்சென்று அடையாளக் கடவுள்களிடம் கொட்டுகிறேன்' என்பவர்கள் 'தங்களின் பசியையும், தூக்கத்தையும், பால் சார்ந்த விருப்பத்தையும் விட முடிகிறதா' என்று பாருங்கள். முயற்சி செய்துவிட்டு உங்கள் செயலைத் தொடருங்கள். இங்கு யாவுமே உயிர்களுக்காக படைக்கப்பட்டது. அறிவுகெட்டத்தனமாக இன்னொரு உயிருக்கான ஆதாரத்தை அழிக்காதீர்கள். பாதையில் பசியோடு பிச்சைக் கேட்கும் பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாய் போடாமல் உள்ளே சென்று உண்டியலில் 100 ரூபாய் போடுவதன் பலன் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. எல்லா உயிர்களையும் நிர்வானமாகப் படைத்த கடவுளுக்கு ஆடையும், ஆபரணங்களும் அவசியமாக இருக்கும் என்று தோன்றவில்லை. உங்கள் கடவுள்களில் யாருமே படைக்கப்பட்ட உணவில் ஒரு வாய் கூட எடுத்து உண்ணப்போவதில்லை. வாழும் வரை தான் தேவை; வாழ்பவனுக்குத் தான் தேவை. தேவை இல்லாத ஒரு பொருளும், குப்பையும் சமம் தான். யாருக்குத் தேவை இருக்கிறதோ அவர்களுக்கு அதை கொடுங்கள்.

தன் கடவுளுக்குப் பெயர் வைக்காத மதங்களும் கூட இருக்கிறது. 'தனக்கு என்று தனியாக எந்த ஓர் அடையாளமும் இல்லை' என்று சொல்லும் மதம் இந்த உலகத்தில் இருக்கிறதா? முன்னாலில் இருந்து இருக்கிறதா? மதம் தன்னைத் தனித்துக்காட்டிக்கொள்ள அடையாளங்கள் தேவைப்படுகிறது. எவனோ ஒருவனுக்கு இல்லை சிலருக்கு சரியெனப்பட்ட கொள்கை, வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், கலாச்சாரங்கள் இவைகளை விமர்சிக்காமல்/ மாற்றிவிடாமல்/ கட்டாயத்தோடு பின்பற்ற வைக்கத்தான் இன்றைய அடையாளக் கடவுள்கள்/மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன. முதலில் பிறந்தார்கள்; பின்னால் பெயர் வைத்தார்கள். கொள்கை முரன்படும்போது மதம் பிளவுபட்டிருக்கும். எப்படிக் கட்சிகள் உடைவதும்; யாரோ ஒருவனை முன்னிருத்தி புதுக் கட்சிகள் பிறப்பதும் சாத்தியமானதோ; அப்படியே புதுப்புது மதங்களும் தோன்றின. இந்த உலகத்தில் இருக்கும் எந்த மதமாவது சொல்லட்டும் "நான் எந்த மதத்தினுடைய உட்பிரிவாக இல்லை; என் மதத்தில் எந்த உட்பிரிவும் இல்லையென்று". அடையாளக் கடவுள்கள் விளம்பரப்படுத்தப்படுகிறார்கள். ஆஃபர்கள் கொடுத்து தன்னுடைய மதத்திற்கு ஆள் சேர்க்கிறார்கள். மதம் தான் உருவாக்கிய போலியான கடவுள்களுக்கு ஆள்சேர்க்கப் போய் அதனால் வந்த சோகம் தான் மனிதனைத் தன் இயல்பை மறந்து எங்கேயோ அலையவைத்திருக்கிறது.

எந்தெந்த காரணத்திற்காக மனிதன் அடையாளக் கடவுளைத் தேடி ஓடுகிறானோ; அந்தந்த காரணங்களுக்காகவே அவரும் தேவைப்பட்டார்; அதனால் படைக்கப்பட்டிருக்கிறார். கோவிலுக்குள்ளாகவே இருந்தாலும் மணி அடிக்கும் வரை எதைப் பற்றியெல்லாம் யோசிக்கிறோம் என்று திரும்பிப்பார்த்தால் தெரியும்; மனிதனுக்கு ஏன் அடையாளங்கள் அவசியமென்று. அடையாளங்கள் இல்லாமல்போனால் மனிதனால் ஒரு விஷயத்தை நம்பக்கூட முடியாது. அத்தனைச் சடங்குகளும், சம்பிரதாயங்களும், வடிவங்களும், சுலோகங்களும் நம்பிக்கைக்கு வலுசேர்ப்பதான விஷயங்களே. விவரிக்கப்படாத ஒன்றன்மேல் மனிதனின் விருப்பம் போகாது; ஒன்று விவரிக்கப்பட வேண்டுமெனில் அது குறித்த நிகழ்வுகள் வேண்டும்; இதற்காகவும் தான் சில மதங்களில் கடவுள்கள் பிறந்து வளர்ந்தார்கள். ஏதோ ஒன்று உன்னைக் காக்கும் என்று சொல்வதை விடவும் ஒரு அடையாளம்/உறுதிப்பொருள் அவசியமாகிறது. முதலில் மனிதனுக்குப் பசி எடுத்தது; அதன் பின்னால் தான் உணவு அடையாளம் காணப்பட்டது. முதலில் மனிதனுக்கு அச்சம் எழுந்தது; அதன் பின்னால் தான் அடையாளக் கடவுள்கள் அவசியம் ஆனது. "இந்த உலகத்தில் பேய்/ பிசாசு/ தீயசக்தி என்ற ஒன்று இல்லை" என்று சொல்பவன் எவனாவது கடவுளின் இருத்தலை ஏற்றுக்கொள்கிறானா? இங்கு மனிதனுக்குக் கடவுளின் அவசியமே பயத்தின் வெளிப்பாடாகத் தான் இருக்கிறது. உயிரினத்தில் எது வலிமையானதோ அது மற்றதை ஆட்சி செய்யும்; ஒரு கட்டத்தில் அவை கடவுளாகவும் கருதப்படும் என்பதற்கு ஆதாரங்கள் வரலாற்றில் நிறையவே இருக்கிறது. சிலர்

'கதைகள்' என்று ஒதுக்க; சிலர் 'இல்லை இல்லை இதோ அதற்கான ஆதாரங்கள்' என்று நீட்ட; உண்மையானது அவர்கள் கடவுளாக்கப்பட்ட மனிதர்கள். சில குடும்பங்களில் மூதாதையர்கள் கடவுளாக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

எப்படி வேறு வேறு மொழிகளில் கடவுளுக்குப் பெயர்கள் பிறந்ததோ அப்படியே வேறு வேறு மதத்தின் அடையாளக் கடவுள்களும் பிறந்தார்கள். இங்கு எதற்கு இந்தக் கடவுள் பிறந்து வளர்ந்தான்? அங்கு ஏன் அந்தக் கடவுள் பிறந்து வளர்ந்தான்? என்றெல்லாம் தெரியாது; ஆனால், மொத்தத்தில் எல்லா ஊர்களிலும் எவனோ ஒருவன் பிறந்துவிட்டான். இந்த மதத்தின் கடவுள் தான் உயர்ந்தவர்; அந்த மதத்தின் கடவுள் தான் உயர்ந்தவர்; அந்த மதத்திலும் கூட குறிப்பிட்ட அந்த தெய்வம் தான் உயர்ந்தது; என்ன ஒரு வேடிக்கையான போட்டி. எந்த ஒரு சமயத்தை சார்ந்தவனுக்கும் அவன் ஏற்றுக்கொண்ட சமயத்தைத் தாண்டி வேறொரு கடவுள் நேரடியாகவோ அல்லது வேறு உருவாகவோ கண்ணுக்குத் தெரிந்ததாக சரித்திரம் இல்லை; இருந்தும் எல்லா கடவுள்களும் யாரோ ஒருவரின் கண்ணுக்குத் தெரிந்து விடுகிறார்கள். உண்மைக் கடவுளாகவும் இருந்தாலும் அவர் மதம் மாறி தான் மனிதனை சந்திக்க வேண்டும்; அப்பொழுது தான் மனிதன் ஏற்றுக்கொள்வான். ஒரு சுவாரஸ்யமான அதே சமயத்தில் குழப்பமான உண்மை என்னவென்றால் அதீத நம்பிக்கையோடு நீங்கள் கடவுளைக் காண விரும்பினால் கடவுள் தெரிவார்; ஏன் பேயும் கூட கண்ணில் தெரியும்; அதற்காக அங்குக் கடவுளோ, பேயோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தான் கொண்ட நம்பிக்கைக்கு அத்தாட்சியாக சொன்ன பொய்களும், திரிந்துப் புரிந்த நிகழ்வுகளும், இல்பொருள் காட்சிகளும் தான் கடவுள் நேரிலே வந்த செய்தியெல்லாம்.

ஒருவேளை கடவுள் தன் கண்முன்னால் வந்து நின்றால்; அவர் என்ன நிறம் என்று பார்ப்பான்; அவலட்சணம் எதுவும் அவரிடம் இருக்கிறதா என்று பார்ப்பான்; காலும், கையும் பயன்படுத்த வேண்டியதற்குப் பயன்படுத்த வேண்டும்; இரண்டு கண் இருந்துவிட வேண்டும்; வாய் இல்லையென்றால் எப்படிச் சாப்பிடுவார்? மூக்கு கண்டிப்பாக முகத்தில் தான் இருக்க வேண்டும்; இப்படித்தான் இருக்க வேண்டும்; அப்படித்தான் இருக்க வேண்டும் என்று எத்தனை வரையறை. மரக்கொட்டை என்ன பாவம் செய்ததோ. என் வீட்டில் எந்த மூலையில் பார்த்தாலும், குச்சியில் ஏற்றி சுவற்றுக்கு வெளியே தூக்கி வீசுவதே வேலையாய் போனது. எறும்பு, ஈ, பல்லி, கரப்பான்பூச்சி இவை ஏற்றுக்கொள்ளப்பட்டவை. இத்தனை தடைகள் இருக்க அவர் எப்படி முன்னால் வருவார்? நாம் எல்லோரும் ஒரு கற்பனையில் இருக்கிறோம்; அதற்குள்ளாக அவர் பொருந்தவில்லை என்றால் அவரைக் கடவுளாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஒருவேளை நானே கடவுளாக இருந்து "அட அறிவுகெட்ட மனுஷங்களா, ஏண்டா முட்டாள்தனமா என்னை வழிபடுறீங்க; என் பேற சொல்லி திரியுற திருடனுங்க/ அயோக்கியனுங்க கால்லலா போய் விழுறீங்க"-னு கேட்டுவிட்டால் முடிந்தது. என்னை நிச்சயமாக நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். கடவுள் வாய்திறந்து பேசிவிட்டால் மனிதர்களிடமிருந்து காணாமல் போய்விடுவார்.

மதம் மனிதனுடைய சூழ்நிலையைச் சந்தேகப்பட வைக்கிறது. தனிமனிதனைக் குற்றவாளிகளாக்கியும்; அவனது சூழ்நிலையைக் குறை கூறியும்; ஏன் ஒருவரை ஈர்க்க முயற்சிக்கிறது? மதத்தின் பெயரால் மனிதர்கள் ஒன்று சேர்க்கப்படுகிறார்கள். நாளையே ஒரு கொள்கைக்குப் பின்னால் மதத்தை உருவாக்கி மக்களைப் பின்பற்றவைத்துவிட்டேன் என்றால் நான் என்ன சொல்கிறேனோ அதை அப்படியே செய்துவிடுவார்கள். மதத்தைத் தவிர வேறு எந்த ஒரு சக்தியாலும் முடியாது. உலகம் முழுவதும் மதம் முன்னிலைப்படுத்தப்படுவதன் காரணம் இதுதான். "நான் என் இஷ்டத்திற்கு இருந்துட்டு போறேன்; உன்கூடலா யாரால இருக்க முடியும்; எங்கயாவது போ" என்று எந்த உறவையும் முறித்துக்கொள்ள முடியும். எந்த உறவையும் உதாசினப்படுத்திவிட முடியும். எந்த உணர்வையும் தூக்கி எறிந்துவிட முடியும். மனித மனோபாவம் பதிலை விரும்புகிறது; முடிவை விரும்புகிறது. கேள்வி கேட்டதால் பிறந்தது மதம்; பதில் இல்லாததால் பிறந்தது மதம். தொங்கி நிற்கும் நிகழ்வுகளும், தொடர நினைக்கும் ஆசைகளுமே கனவுகளாக வெளிப்படுகின்றன. இங்கு இருக்கும் அத்தனை நாத்திகவாதிகளுக்கும் கடவுள் மீது கோபம், வெறுப்பு. எந்த ஒரு மனிதனாவது தன் வாழ்நாளில் கடவுளைப் பற்றி சிந்தித்ததில்லை/கோபப்பட்டதில்லை

என்று சொல்லட்டும் பார்க்கலாம். இல்லை என்று உறுதியாக நம்பினால் அதன்மீது கோபம் எப்படி வரும்? வெறுப்பு எப்படி வரும்? எங்குப் போனாலும், என்ன செய்துகொண்டு இருந்தாலும் ஏதாவது ஒரு மதத்தைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. நேற்றுவரை நாடுகளுக்கு இடையே நடந்த போர்களில் எது முன்னின்றது என்று வரலாற்றைப் புரட்டிப்பாருங்கள்; மதம் ஏன் அதிகாரம் பெற முயல்கிறது என்பதன் காரணம் தெரியும்.

கடவுளை ஏற்றுக்கொள்ளுங்கள்; அதற்காக மதத்தின் பின்னால் பைத்தியக்காரத்தனமான செயல்களைச் செய்துகொண்டு இருக்காதீர்கள். 'எல்லாம் சரியாக நடக்கிறது' என்ற ஒரு உணர்வை தான் சார்ந்த மதம் அவனுக்குக் கொடுக்கவில்லை என்றால் அப்படிப்பட்ட மதம் அவசியம் தானா? நீ நலமாக இருக்கிறாய், உன் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது என்ற உணர்வை கூட நீ கொண்ட மதம் உனக்கு ஏற்படுத்தவில்லையானால் அது உனக்குப் போதிப்பது தான் என்ன? எந்த ஒரு மதம் மனிதனை அடி மட்டமாக, மிகத் தாழ்வாக, அவலமாக சித்தரிக்கிறதோ அந்த மதத்திலிருந்து மனிதன் விலகி விடுவது நல்லது. நீங்கள் வழிபடும் மதம் உங்களுக்கு எதைக் கொடுக்கிறது என்று பாருங்கள்; அதற்குள்ளாகவே அந்த மதத்தைப் பின்பற்றுவது சரியா என்ற முடிவையும் நீங்கள் எடுத்துவிட முடியும்.

இந்த உலகத்தைப் படைத்தது இறைவனாகவோ அல்லது இயற்கையாகவோ தான் இருக்க முடியும். இரண்டுக்குமே உயிர்களின் மகிழ்ச்சி என்பது தானே நோக்கமாக இருக்க முடியும். நான் கடவுளாக இருந்தால் என்னால் படைக்கப்பட்ட உலகத்தை எப்படி மகிழ்ச்சியாக படைப்பேனோ; நான் ஒரு தந்தையாக இருந்தால் எப்படி என் குழந்தைக்கு ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க முற்படுவேனோ; அதைத் தான் இன்று நாம் காண்கிறோம். எல்லா உயிர்களுக்குள்ளாகவும், பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவுக்குள்ளாகவும் நிறைந்து இருப்பதால் தான் அவர் கடவுள். தன் படைப்புகள் ஒவ்வொன்றின் வாயிலாகவும் தன் இருத்தலை உறுதிசெய்யும் கடவுளுக்குத் தனித்த ஒரு பிறப்பு தேவையா? மனிதனை சோதித்து அறிவதற்கும், அதன்பின்னே ஏற்றுக்கொள்வதற்கும் மனிதன் கடவுளிடமிருந்து வேறுபட்டவன் இல்லை. படைப்புகள் யாவும் படைத்தவனின் சாராம்சமே. தன்னுள்ளாகவும், எதிரே இருப்பவனிடத்திலும் இறை தன்மையை உணருங்கள். இறைவனிடத்திலும்கொள்ள வேண்டியது பக்தி உணர்வல்ல; அன்பு மட்டும் தான்.

பிரபஞ்சத்தில் இல்லாதது என்றும் இல்லாதது தான்; இருப்பது என்றுமே இருப்பது தான். எல்லாம் சுயற்சிக்கும், மாற்றத்திற்கும் உட்படும் வேலையில் கடவுளுக்கு இந்த வாழ்க்கையைப் போராட்டமானது என்று கருதவோ; உயிர்கள் மீது அனுதாபம் கொள்ளவோ; வாழும் உயிர்களுக்கு ஓடிவந்து உதவவோ அவசியம் இல்லாமல் போகிறது. இந்தப் பிரபஞ்சத்திலிருந்து எந்த ஒன்று தொலைந்துபோனது; உதவ வந்து தேடிக் கொடுப்பதற்கு? நேற்று இருந்தது இன்று இருக்கிறது; இன்று இருக்கிறது நாளையும் இருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு இடம் தேவை. எல்லா பொருட்களையும் ஒரு சிறிய இடத்திற்குள்ளாக அடைத்துவிட முடியாது என்பதால் தான் இந்தப் பிரபஞ்சம் இவ்வளவு பெரியதாக வியாபித்து இருக்கிறது. ஒரு மாபெரும் விருச்சம் எப்படி ஒரு விதைக்குள்ளாக இருந்தது? விதை எந்த ஒன்றை தான் விழுந்த மண்ணிலிருந்து எடுத்துக்கொண்டு விருச்சமானது? மண்ணுக்கும் மரத்திற்கும் என்ன தொடர்பு? மரங்கள் தன் இலைகளை உதிர்க்கின்றன; பிறக்கும் உயிர்கள் யாவும் இறக்கின்றன. ஒன்றின் அழிவில்/ முடிவில் இன்னொன்று பிறக்கிறதென்றால் தவறு; அந்த ஒன்றே இன்னொன்றாகப் பரிணமிக்கிறது என்பதே சரி. சைவம் அசைவம் என்றெல்லாம் தனித்தனியாக உணவு வகைகள் கிடையாது. ஆடு சைவமானால் அதை அடித்து திண்ணும் புலி எப்படி அசைவமாகும்? ஆடு எதை இந்தப் பிரபஞ்சத்திலிருந்து எடுத்து உண்டு வளர்கிறதோ அதையே புலியும் எடுத்துக்கொள்ள முயல்கிறது.

படைப்பின் மூலப்பொருள் ஒன்று தான். முதல் நாள் முடிவில் எரித்தார்கள். அடுத்த நாள் சென்று பார்த்தபோது கூட்டிவைக்கப்பட்டிருந்த சாம்பல். அதில் எவ்வளவு உடன் வைத்து எரிக்கப்பட்ட விறகுக்கும், சாணத்திற்கும், வைக்கோலுக்கும் சொந்தம் என்று தெரியவில்லை. எரிந்தும் எரியாமலும் கொஞ்சம் மண்டை ஓடுகளும், பல் பொதிந்திருந்த தாடை எலும்புகளுமே

எஞ்சி இருந்தது. அதை எடுத்து ஒரு பானையில் போட்டு கொடுத்து "காசிக்கு போறேன், இராமேஸ்வரம் போறேன்" என்று இறந்த பின்னாலும் அவரிடம் பொய் சொல்லிவிட்டு செல்ல சொன்னார்கள். வெளியில் வந்து அதையும் ஒரு உறவிடம் கொடுத்துவிட்டு கடந்துவந்து காலங்கள் ஓடிவிட்டது. நேற்றுவரை நிரம்பியிருந்த அந்த இடம் இன்று வெற்றிடமாக இருக்கிறது. "வெளிய போ, போப்பா, சரி சரி" இப்படி சொல்லியும், பதில் பேசாமலும் அந்த அறையிலிருந்து வெளியேற்றிய மனிதர் இன்று அங்கு இல்லை. அன்றுவரை பொக்கிஷம்போல் அறை முழுக்க நிரம்பியிருந்த ஆன்மீக புத்தகங்களில் ஒன்றிரண்டு தவிர அத்தனையும் அகற்றப்பட்டு; பயன்படும் என்று கருதிய பொருட்களைத் தவிர மற்றவை யாவும் மூன்றாம் நாள் முடிவிலேயே குப்பையாகிப்போனது.

எதையெல்லாம் எடுத்துக்கொண்டு இந்த உடல் தன்னைக் கட்டமைத்துக்கொண்டதோ அதையெல்லாவற்றையும் ஒருநாள் விட்டுவிட்டு சென்றுவிடுகிறது. எதையுமே மனிதன் எடுத்துக்கொண்டு போகவில்லை. எல்லாம் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு இடம்பெயர்ந்து போகிறது. வாழும்போதும், வாழ்க்கைக்குப் பிறகும் பிரிந்து செல்லும் எல்லாம் இன்னொருவரிடம் சென்று சேர்கிறது; வந்துசேரும் எல்லாம் பிரபஞ்சத்தில் இன்னொரு உயிரிடமிருந்து பிரிந்து வந்ததே. <u>நேற்று சிதைந்த ஒன்று; இன்று ஒன்று சேர்ந்ததால் நீ. இன்று உலகில் இருக்கும் யாவும் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து வந்தது; நாளை சிதைக்கப்பட்டு இந்தப் பிரபஞ்சத்தோடே சேர்க்கப்படும். உன்னுடையது என்று சொல்லும்படியாக எதுவும் முன்னால் இல்லை; எதிர்காலத்திலும் இல்லை. இன்று நீ குடிக்கும் நீர்; அன்று யாரோ ஒருவர் குடித்த நீர். எது நேற்று கழிவானதோ; அதுவே இன்று உனவானது.</u>

இந்த வாழ்க்கை மிகவும் அழகானது. இந்த உலகம் முழுவதும் மகிழ்ச்சியால் நிறைந்தது. இந்த உலகம் சந்தோஷமாக இருப்பதற்கானது. வெறுத்து வாழ்வதற்கோ, விலகி ஓடுவதற்கோ எந்த அவசியமும் இல்லை. நான் கடவுளாக இருந்தால் இல்லை நீங்கள் கடவுளாக இருந்தால் எப்படிப்பட்ட பிரபஞ்சத்தைப் படைக்க விரும்புவீர்களோ அதைத்தான் கடவுளும் படைத்திருப்பார்/படைத்திருக்கிறார். இங்கு எல்லாம் எளிமையானது. எல்லாமே காரண காரியங்களோடு மிகச் சரியாக நடக்கிறது. அறிவியலும் ஆச்சரியப்படும் உண்மை எப்படி இந்தப் பிரபஞ்சம் நேர்த்தியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பது. புரிந்துகொள்ளுங்கள் அறிவியல் கடவுளை ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால், அறிவியலாளர்கள் கடவுளை விட்டுவிடவில்லை. எல்லா நிகழ்வுகளும் ஆனந்தமே. பிறப்பு ஆனந்தமானது; வாழ்வு ஆனந்தமானது; நிகழ்வு ஆனந்தமானது; இறப்பும் ஆனந்தமானது.

குழந்தை வீட்டுக்குள்ளாக பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடும் வரை எந்தத் தாயும் "பார்த்து விளையாடு" என்று சொல்வதில்லை. குழந்தைத் தன் பார்வையில் இருக்கிறவரையிலே அச்சம்கொள்வதில்லை; குறுக்கிடுவது இல்லை. கடவுள் நம்மிடையே இருக்கிறார். இந்த உலகம் பாதுகாப்பானது என்ற நம்பிக்கைக் கடவுளுக்கு இருக்கிறது; மனிதனுக்குத் தான் இல்லை. தன் குழந்தை நடக்க முயன்றால் தடுமாறி கீழே விழலாம் என்று தாய் தூக்கி வைத்துக்கொண்டே இருந்தால் எந்தக் குழந்தையும் இரண்டு கால்களால் நடக்காது. தன் தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு போகும் இடம் காடாக இருந்தாலும் அச்சமின்றிப் போவதற்குக் குழந்தைத் தயாராக இருக்கிறது. அந்தக் குழந்தைக்கு இருக்கும் நம்பிக்கை; எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பவர் என்று சொல்லும் கடவுளிடம் மனிதனுக்கு இல்லை. மனிதன் வளர வளர எதைப் பெறுகிறானோ இல்லையோ தன் நம்பிக்கையை இழந்து விடுகிறான். எல்லாம் சரியாக நடக்கிறது என்ற நம்பிக்கை தான் வேண்டும். 'ஆபத்தில் கடவுள் வந்து உதவுவார்' என்று எண்ணம் கொண்டாலே அவருக்கு எதிரான சக்திகளும் இருக்கின்றன என்று நம்புவதாகும். "எனக்குப் பயமாக இருக்கிறது; அதனால் உன் கையைப் பிடித்துக்கொள்கிறேன்" என்று சொல்லுவது நம்பிக்கை இல்லை. நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கை என்ற இரண்டு கருத்துக்களையும் கொண்டிருக்காமல் பிணைந்திருக்கத் தகுந்தது கடவுள்.